# ஆழ்கடல் முத்துக்கள்

க. அருள்ராஜ்



# ஆழ்கடல் முத்துக்கள்

(கவிதைத் தொகுப்பு)

## க. அருள்ராஜ்

இல. 211/63
நாகலகம் வீதி,
கொழும்பு - 14
தொ.பே. 0786 183650

நூல் பெயர் ~ ஆழ்கடல் முத்துக்கள்

(கவிதைத் தொகுப்பு)

ஆசிரியர் ~ க.அருள்ராஜ்

முதற்பதிப்பு ~ 2007

பக்கம் ~ ix + 36

பிரதிகள் ~ 1000

உரிமை ~ ஆசிரியருக்கு


சித்திரம் ~ க.அருள்ராஜ்

வெளியீடு ~ க.அருள்ராஜ்

ஆக்கம் ~ க.அருள்ராஜ்

விலை ~

# சமர்ப்பணம்



**அருட்தந்தை சவரிமுத்து அ.ம.தி அடிகளார்**

**அன்னையாய்**

**தந்தையாய்**

**பாசமாய்**

**நேசமாய்**

**என்னை வளர்த்த அருட்தந்தை**

**சவரிமுத்து அடிகளாருக்கு என்**

**கன்னிமலர்**

**சமர்ப்பணம்**

## உள்ளே....

அணிந்துரை

என்னுரை

ஆசித்துளிகள்

01) மனசே காரணமே

02) பக்தியால் உணர்ந்திடலாம்

03) மனிதா

04) தெய்வமும் குழந்தையும்

05) தேடல்

06) உறவு

07) அன்னையே

08) அன்பு

09) சிரிப்பழகு

10) சூரிய உதயம்

11) கடலோரக் காற்று

12) காதலது தப்பில்லை

13) காதல்

14) பெப்ரவரி - 14

15) கலைந்தது என்கனவு

16) நீயும் பேதையே

17) நீ அறியாயோ

18) நினைத்ததில்லை

19) புதுயுகம் படைப்போம்

20) இயற்கை உன்னை மாற்றும்

21) நம்பிக்கை ஒளி

# அணிந்துரை

"தத்துவ ஞானம் புத்துயிர்
பெற்றது யூத நிலத்தினிலே
சத்திய வேதம் நின்று நிலைத்தது
தரணி மீதினிலே
எத்தனை கோடி உண்மை பிறந்தது.
இயேசு பிறந்ததிலே.
இத்தனை நாளும் மானிடம் வாழ்வது
இயேசுவின் வார்த்தையிலே"

என்று இயேசுவின் புகழை பாடினான் கவிஞர் கண்ணதாசன். இந்த வகையில் நூலாசிரியர் க. அருள்ராஜ் அவர்கள் எவ்வளவு அற்புதமாக பூக்களை கோர்த்து மாலை ஆக்குவது போல இங்கே வடித் திருக்கும் அவரது சொற்புலம்பல்களும், நயங்களும், ரஸங்களும், சொல்ல வார்த்தைகளின்றி புழங்காகிதம் அடைகின்றன. என்று செப்பனிட்டு கூற முடிகின்றது.

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் – தன் மகனை
சான்றோ னெனக் கேட்ட தாய்"

இங்கே தமிழ் அன்னை பெற்றெடுத்திருக்கும் அருள்ராஜ் எனும் இளம் கவிஞனை பாராட்டி சீராட்டி, பார்போற்ற பெருங்கவிஞனாக வரவேண்டும் என கன்னிப் படைப்பாய் கருத்தரித்திருக்கிறாள்.

இனம், பண்பாடு, கலாச்சாரம், மொழி என்பவற்றைக் கொண்டு ஒருவனை "மதம்" எனும் நெறியூடாக வழிப்படுத்துவது தான் நிர்ணயிக்கப்பட்ட சமயம். இந்த வகையில் அந்த மதம்மேல் பற்று, உறுதி கொண்டு கடின உழைப்பாலும் இறை விசுவாசத்தாலும் ஒருவன் நன்நெறி படுத்தப்படுகின்றான்.

இங்கே நூலாசிரியர் எவ்வளவு தூரம் அவர் தன் மதத்தின் மேல் கொண்ட பற்றும், இறை விசுவாசமும் அவரது கவி நூலான "**ஆழ்கடல் முத்துக்கள்**" மூலம் அவர் சிதறிய, சந்திய துளிகள் தெட்டத்தெளிவாக காட்டி நிற்கின்றன.

பொதுவாக கவிதை எனும் போது மரபு கவிதை, புதுக்கவிதை என இரு வேறு தன்மைகள் உள்ளடக்கப் படுகின்றன. இதில் மரபுக்கவிதை எனும் போது செய்யுள் காப்பு அமையும் பின்னர் எதுகை, மோனை சட்ட முறை பேணப்படும். மாறாக புதுக்கவிதைகளில் எதுகை மோனை சட்ட முறை சிறிதளவில் காணப்பட்டாலும் அதில் வரையறையாக கட்டுக் கடங்காதவையே இவ்விரண்டு முறைகளையுமே நன்கு தெரிந்தவர்களால், பாண்டித்தியம் பெற்றவர்களால் மட்டுமே கவிதை மரபைப் பேணி கவி வடிக்க முடியும்.

நூலாசிரியர் க. அருள்ராஜ் அவர்கள் மிக்க ஆர்வத்தோடும், பொறுமையுடனும், உள்ளத்து உணர்ச்சிகளை, தெட்டத்தெளிவாக மெல்ல மெல்ல வருடிப் பகுத்துள்ளார்.

இவரது படைப்பான "**ஆழ்கடல் முத்துக்கள்**" எனும் கவிதைத்துளிகள் சமுத்திரத்தில் சங்கமமாகி அங்கேயும் இவர் "சமுத்திரத்தில் முத்துக்கள்" எடுப்பார் என்பதில் ஐயமில்லை.

வாழ்க கவிஞன் புகழ்!
வளர்க அவன் செயல்!

**அன்புடன்**
**நயினை கவிஞன்**
**சொ. சண்முகரூபன்**

# என்னுரை

பல நாள் கனவுகள் நிஜங்களாக மாறும் கணம் எல்லையில்லா சந்தோஷத்தில் மூழ்கடிக்கின்றது. "ஆழ்கடல் முத்துக்கள்" எனும் இக்கவிதை தொகுப்பு என்னுடைய கன்னிப்படைப்பு மட்டுமல்ல எதிர்காலத்தில் நான் படைக்கப் போகின்ற ஆக்கங்களுக்கும் அடித் தளமாகும். நான் படைக்கும் கவிதைகள் ஒவ்வொன்றும் வெறுமனே ரசனைகளாக மட்டுமன்றி ஒவ்வொருவருடைய மனதையும் தொடுகின்ற வாழ்க்கையின் நிஜங்களை வெளிப்படுத்துகின்ற மறுக்க முடியாத உண்மைகளை புலப்படுத்துவதாக அமைய வேண்டும் என்பது தான் எனது நோக்கம். இது ஒரு "முத்து மாலை" ஏனென்றால் இந்த மாலையை நான் படைக்க பலமுறை என் ஆழ் மனக்கடலுக்குள் மூழ்கி அனுபவங்களை கற்றவைகளை, புதிய சிந்தனைகளை முத்துக்களாக சேர்த்து கோர்த்தமாலை. ஒவ்வொரு முத்துக்களாக தன்னகத்தே தனித்துவம் கொண்டவையாக அமையவே படைத் துள்ளேன் இதை வாசிக்கும் ஒவ்வொரு உள்ளங்களையும் ஏதோ ஒரு வகையில் தொடும்; பல உண்மைகளை உணர வைக்கும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. இக்கனவு நூலை நனவு நூலாக மாற்ற அடி நாதமாக இருந்து பல வழிகளில் பண உதவிகளையும் புரிந்த என் நண்பன் ரொனிக்கும், நண்பி சூட்டியிற்கும் எனது கரம் கோர்த்த நன்றிகள். எனது கவிதைகள் நூலாக மலர முதலில் பல வழிகளில் உதவி புரிந்த என் நண்பன் அருட்சகோதரன் ரமேஸ்

அவர்களுக்கும் எனது நன்றிகள். பள்ளிப்பருவம் முதல் இன்றுவரை உற்ற நண்பனாக இருந்து என் கவிதைகளுக்கு வாழ்த்துதல் மூலம் கிரீடம் கோர்த்த என் நண்பன் அருட்சகோதரன் ரவிகாந்த் அவர்களுக்கும் எனது நன்றிகள் சமர்ப்பணம்.

பல வருடம் என்னோடு உற்ற நண்பனாக பயணம் செய்து பல வெற்றிக்கு காரணமாக இருந்ததுடன் இந்நூலுக்கென வாழ்த்துரை வழங்கிய என் நண்பன் வரதனுக்கு எனது மனம் நிறைந்த நன்றிகள். பலவழிகளில் எனக்கு உதவிபுரிந்து வழிமுறைகள் கூறிய இக்கவிதை மலர் நூலாக மலர துணையாக இருந்த என் நண்பர்கள் யூட்பிலேவின், ரதீஸ்குமார் குடும்பத்தினருக்கும் எனது நன்றிகள். என் கவிதைத் திறமையைக் கண்டு, என்னைத் தொடர்ந்து ஊக்கப்படுத்தி என் வெற்றியில் சந்தோஷத்தையும் எனது தோல்வியில் துக்கத்தையும் பகிர்ந்து கொண்ட, என் அன்பின் கொலின்டாவுக்கும் எனது இதயம் நிறைந்த நன்றிகள். அத்துடன் பல சிரமங்களின் மத்தியிலும் என் கவிதை மலரை வாசித்து அதற்கு அழகிய அணிந்துரை வழங்கிய நயினை கவிஞன் சொ. சண்முகரூபன் அவர்களுக்கும் எனது நன்றிகள். மற்றும் இப்புத்தகத்தை அச்சிட்டு வெளியிடுவதற்கு அழகிய முறையில் புத்தகத்தின் அட்டைப்படத்தை வடிவமைத்தும் அச்சிட்டும் கொடுத்த "லங்கா பப்ளிசிங் அவுஸ்" நிறுவனத்திற்கு எனது நன்றிகள். மற்றும் நன்றி கூறுவதற்கு மறந்த அனைத்து நெஞ்சங்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

# வாழ்த்துரைகள்

நிஜங்களை நிஜங்களாக
நம்பிட எடுத்தியம்பி சமகால தேவையினை
நினைவிலிருத்தி
பச்சை எதார்த்தங்களையும்
பட்ட அனுபவங்களையும்
வேரோட்டமாக நறுக்கென
நிரவி விட்டும்... மலரும்
ஆழ்கடல் முத்துக்கு என்
இனிய ஆசிகள்.

**செ. ஆதி (ரவிகாந்த்)**

புலராத பொழுதுகளை
புலர வைக்க
உலர்ந்து போன இதயங்களை
கசிய வைக்க
உடைந்து போன மனங்களை
ஒட்ட வைக்க
அருள் அற்புதமாக
மண்ணில் மனிதம் மலர
ஆழ்கடல் முத்துக்களில்
ஆழமான அனுபவங்கள்
யதார்த்தமான சிந்தனைகள்

விவாதிக்க முடியாத உண்மைகள்
ஆழப் பொதிந்த
ஆழ்கடல் முத்துக்களில்
வாழ்வின் சுவைகாண
மூழ்குவோம்
முத்தெடுக்க...

**நெடுமாறன் (பா. யேசுநாதன்)**

ஆழ்கடல் முத்து எனும் அருளது படைப்பு உண்மையிலே கவியுலகிலே வளரும் இளம் சமுதாயத்தினருக்கு கவிநயத்தை விளக்கவும் அவர்களின் ஈடுபாட்டை வளர்க்கவும் வித்தாக அமைகின்றது. தூய தமிழில் கவிநயத்துடன் கருத்தாழமிக்க தன் உயரிய சிந்தனைகளை நவின பாணியில் புனைந்துள்ள இளங்கவிஞனான என் நண்பனின் முயற்சியை பாராட்டுகின்றேன்.

யா. ரமேஸ்
*(BBA Hons, BIT Dip in Psy)*


அருள்ராஜ் அவர்கள் தனது சிந்தனை துளிகளை கவிதை வடிவில் கன்னிப்படைப்பாக வெளியிடுவதை மகிழ்ச்சியோடு பாராட்டுகின்றேன்.

- வரதராஜ்-


# மனசே காரணமே

கல்லையும் கடவுளாக்கும்
இந்த மனசு ~ உண்மை
கடவுளையும் கல்லாக்கும்
இந்த மனசு
புல்லையும் புருஷனாக்கும்
இந்த மனசு ~ உண்மை
புருஷனையும் புல்லாக்கும்
இந்த மனசு
கிழவியையும் அழகியாக்கும்
இந்த மனசு ~ உண்மை
அழகியையும் கிழவியாக்கும்
இந்த மனசு
குடிலிலும் குதூகலிக்கும்
இந்த மனசு ~ உயர்
குடிலிலும் குதூகலிக்காது
இந்த மனசு
ஆர்ப்பாட்டத்திலும் அமைதி கொள்ளும்
இந்த மனசு ~ உண்மை
அமைதியிலும் நிம்மதி இழக்கும்
இந்த மனசு
இல்லாமையிலும் பெருமிதம் கொள்ளும்
இந்த மனசு ~ முற்றும் இருந்தும்
சிறுமிதம் கொள்ளும்
இந்த மனசு
துன்பத்திலும் இன்பம் கொள்ளும்

இந்த மனசு ~ உண்மை
இன்பத்திலும் துன்பம் கொள்ளும்
இந்த மனசு
ஆசையே காரணமாம்
துன்பத்திற்கு கூறினார்
புத்தனவர் ~ யான்
கூற விளைகின்றேன்
இந்த ஆசைக்கும்
மனசே காரணமாமே...



# பக்தியால் உணர்ந்திடலாம்





ஆதி ஒன்றே
அந்தம் ஒன்றே ~ அதை ஆளும்
ஆண்டவனும் ஒன்றே
வானம் ஒன்றே
வையம் ஒன்றே ~ அதை ஆளும்
ஆதவனும் ஒன்றே

வேதம் ஒன்றே
வேள்வி ஒன்றே ~ இதை உணர்ந்தால்
எல்லாம் நன்றே

சக்தி ஒன்றே
பக்தி ஒன்றே ~ இதை புரிந்தால்
முக்தி நாமே

ஆண்டவனைக் கண்டிலர்
அடியவன் யாரும்
கண்டெனக் கூறுபவன்
யாரெனக் கூறும்
உடலில்லை
உருவில்லை ~ இறைவனுக்கு
எப்படி புலப்படும்
மனிதனுக்கு

சக்தியே இறைவனாவான்
அதை பக்தியால்
உணர்ந்திடலாம்.




K. Arulraj
21/5/2007

# மனிதா


குயிலதும் கூவிடும்
மயிலதும் ஆடிடும்
புல்லாங்குழலும் வீணையும்
இசை தந்திடும் ~ உன்
நா என்ன செய்திடும்.

கயமதும் குளிர்ந்திடும்
கதிரதும் பூத்துக்குலுங்கிடும்
திங்களும் ஞாயிறும்
ஒளி தந்திடும் ~ உன்
குணமென்ன செய்திடும்.

மலரதும் மலர்ந்திடும்
மழலையும் சிரித்திடும்
மல்லிகையும் ரோஜாவும்
மணம் பரப்பிடும் ~ உன்
மனதென்ன செய்திடும்
இத்தனைக்கும் வளர்ச்சியுண்டே
உனக்கு மட்டும் ~ ஏன்
இத்தனை தளர்ச்சி.

துதிப்பதிலே குறைத்து
தூசிப்பதிலே அதிகரித்து
சிரிப்பிலே குறைத்து
கேலிச்சிரிப்பிலே அதிகரித்து
சிந்தனையிலே குறைத்து

நிந்தனையிலே அதிகரித்து
நன்மையிலே குறைத்து
பொய்மையிலே வாழ்கின்றாயே
ஒரு கணம்
சிந்தனை கொள்
படைப்பின் சிகரம்
நீயல்லவா
வாழ எத்தனி அதன்படியே...



# தெய்வமும் குழந்தையும்

தெய்வமும் குழந்தையும்

ஒன்றடா

நிறத்திலோ உருவத்திலோ அல்ல

குணத்திலே

பொய்மையும் வஞ்சகமும்

தெரியாதடா ~ அத்துணை

பஞ்சு குணம்

கொண்டதடா

ஒளிமயமான உருவமடா

நொடிப் பொழுதில் ~ யாவரையும்

தன் வசம் ஈர்க்குமடா

புன் சிரிப்பே

அதன் அலங்காரமடா ~ அதற்கு

ஈடு வேறேதும் இல்லையடா

உள்ளொன்று

புறமொன்று பேசாதடா ~ அது

அவர்களின் அறியா மொழியடா

கொடுப்பவனை வள்ளல் என்போம்

அதுவே

இவர்களின் இலக்கணமடா

எடுப்பது

இவர்களுக்கு தெரியாதடா

சூது வாது இவர்களின் அவலட்சணம்


அன்பே இவர்களின் சொந்தமடா

அரவணைப்பே இவர்களின் பந்தமடா

மகிழ்ச்சியே இவர்களின் வாழ்வடா

மறப்பதே இவர்களின் இயல்படா...

# தேடல்



ஆறிலும் தேடல்

அறுபதிலும் தேடல்

பாரிலும் தேடல்

பரலோகத்திலும் தேடல்

அறிஞனும் தேடல்

அறிவிலியும் தேடல்

ஞானியும் தேடல்

விஞ்ஞானியும் தேடல்

மகிழ்விலும் தேடல்

மனக்குழப்பத்திலும் தேடல்

வளமையிலும் தேடல்

வறுமையிலும் தேடல்

துறவும் தேடல்

துறவியும்தேடல்

உறவும் தேடல்


உண்மையும் தேடல்

முதலிலும் தேடல்


முடிவிலும் தேடல்

முதல்வனும் தேடல்

முழுமையும் தேடல்



# உறவு



தொப்புள் கொடியடா

தாய் சேய் உறவு

தாலிக் கொடியடா

கணவன் மனைவி உறவு

அன்புக் கொடியடா

காதல் உறவு

பாசக் கொடியடா

தந்தை மகள் உறவு

வளரும் கொடியடா

நண்பர் உறவு

தளரும் கொடியடா

சுற்றத்தார் உறவு

படரும் கொடியடா

பந்தங்கள் உறவு

பாதிக் கொடியடா

மறந்தவா உறவு

சாதிக் கொடியடா


வஞ்சகர் உறவு

முதல் கொடியடா


பெற்றவர் உறவு

முடிவற்றதடா

இறைவனின் உறவு.



# அன்னையே...



அன்னையே...
அன்பின் வடிவமே
அரவணைப்பின் தெய்வமே
மகிழ்ச்சியால்
உளம் பொங்குதே
உன்னையே
அன்னையாய் - யான்
பெற்றதால்
உன் பெருமை
நானறிவேன்
வியம்புகின்றேன்
ஊரறிய...
கருவாகி
உருவாக
உதரம் தாங்கியவளே - நான்
உடலாக
உயிராக
உதிரம் தந்தவளே
கண்ணின்
மணி போல் - கருவில்
காத்தவளே - நான்
பிஞ்சு மழலையாய்
அவதரிக்க - நின்
மடி தந்தவளே
ஆராரோ
சொல்லி நீ - என்னை
உறங்க வைத்தாயே - நான்

உறங்கும் அழகைக் கண்டு ~ நீ
துயில் மறந்தாயே

ஆ... ஆ...
சொல்லி நீ
உணவூட்டினாயே ~ நான்
உண்ணும் அழகைக்கண்டு ~ நீ
பசி மறந்தாயே...


பா, பல பாடி ~ நீ
சிரிக்க வைத்தாயே ~ நான்
சிரிக்கும் அழகைக்கண்டு ~ நீ
துயர் மறந்தாயே...




K. Arul

# அன்பு

உலகமது நிலையாய் உள்ளது
ஏற்புச்சக்தியால் ~ இந்த
உலகமாந்தர் நிலையாய் உள்ளனர்
அன்புச்சக்தியால்.
காற்றது உள்ளவரையே
பஞானின் உயர்வு ~ உண்மை
அன்பு உள்ள வரையே
மனித உயர்வு
காற்றது இல்லையே
உயிரில்லை ~ இந்த
அன்பது இல்லையேல்
மனிதம் இல்லை.
பூமியது அழகாயுள்ளது.
நிலவுள்ள போது ~ இந்த
பூமி மனிதர்கள் அழகாய் உள்ளனர்
அன்புள்ள போது.




K-Arul
08/05/2007

# சிரிப்பழகு

மழலைச்சிரிப்பே

குழந்தைக்கு அழகு ~ நல்

பொக்கைச் சிரிப்பே

முதியவர்க்கு அழகு

நாணச்சிரிப்பே

மங்கையர்க்கு அழகு ~ நல்

உவகைச்சிரிப்பே

அன்னையர்க்கு அழகு

வீரச்சிரிப்பே

வேந்தர்க்கு அழகு ~ நல்

உள்ளச்சிரிப்பே

வேதியர்க்கு அழகு.

# சூரிய உதயம்


முதலில்லை முடிவில்லை என்றார்கள் ~ முதல்வனுக்கு
வாழ்வில்லை வளமில்லை என்றார்கள் பாலைக்கு
நிரந்தரமில்லை நிரந்தரமான சந்தோஷம் இல்லை
என்றார்கள் வாழ்விற்கு
உனக்கேன் வரைவிலக்கணம் கூற மறந்தார்கள்
இது மனிதனின் பாரபட்சமா அன்றேல் அறியாமையா.

நீ யாரென யான் கூற விழைகின்றேன் ~ உன்
செயல் எதுவென புரிய வைக்க ஆசிக்கின்றேன்
பிழை இருப்பின் மன்னிப்பாயாக.


உன்வரவு அறிந்திடும் விலங்கினம்
உனை வரவேற்க பாடிடும் பறவையினம்
உனைக் கண்டு மலர்ந்திடும் மலரினம்
உனைப் பெற்று புத்துணர்வு கொணடிடும் பச்சையினம்
என்ன என்ன செய்திடும் மனித இனம்.

உழைப்பாளிக்கு உன்வரவு ஆசிர்வாதம்
சோம்பேறிக்கு உன்வரவு சங்கடம்
நிலவுக்கு உன் வரவு அதிர்ஷ்டம் ஆனால்
பனிக்கு உன் வரவு துரதிஷ்டம்.

பலநேரம் நீ ஒரு அழையா விருந்தாளி
சில நேரம் நீ அழைத்தும் வராத தன்மானி
மீனவர்க்கு தோன்றிடுவாய் கடலடியிலும்
மலை நாட்டவர்க்கு தோன்றிடுவாய் மலையிடைகளிலும்
காட்டு வாசிக்கு தோன்றிடுவாய் காட்டிடையே
நாட்டு வாசிக்கு தோன்றிடுவாய் கட்டிடங்களுக்கிடையே
உன் விந்தை தான் என்ன.



# கடலோரக் காற்று



அந்தியதில்
அமர்ந்திருந்தேன்
நந்திக் கடற்கரைதனில்
தென்றலாய் வந்தவள்
வருடிச் சென்றாள்
விந்தையாய் ~ என்
சிந்தை தனை
மயங்கினேன் அவள் வருடலில்
மறுகணம்
நினைத்தேன்
சிறைப்பிடிக்க அவளை
கண்கள் திரும்பின
அவள் சென்ற திசை நோக்கி
இதயம் திறந்தது
நால் திசை நோக்கி
தூது விட்டேன் ~ என்
இதய ராகம் தனை
ஓடி வந்தாள்
ஓரமாய் சுழன்றாள்
வா என்றேன் ~ எனை
தாலாட்ட ~ சீ
போ என்றாள்
வெட்கத்தாலே
கோபம் என்றேன்
பதறிப் போனாள்
செல்லம் என்றேன்
சில்லறையாய் சிரித்தாள்

மறுகணம்
சந்தோஷத்தால்
மையல் கொண்டாள்
மடிதனை தந்தாள்
சாய்ந்தேன்
ஆ... என்ன இதம்
வருடினாள்
வருடினாள்
வருடிக் கொண்டே
இருந்தாள்
யானும்
அயர்ந்தே போனேன்
ஆனந்தத்தால்.




# காதலது தப்பில்லை


காதலது தப்பில்லை
பெண்ணே
யாரை காதலிக்கின்றாய்
என்பதில் தான்
தப்புண்டு கண்ணே
கண்ணனைக் காதலித்தால்
திருமகளாகிடுவாய்
மன்னனைக் காதலித்தால்
திருக்குமாரியாகிடுவாய்
துறவியைக் காதலித்தால்
துறவறம் பூண்டிடுவாய்
பொய்யனைக் காதலித்தால்
பொசுங்கிப் போய்விடுவாய்
வழிப்போக்கனைக் காதலித்தால்
வழி தவறிச் சென்றிடுவாய்
அழகு உன்னை மயக்கும்
ஆண்மை உன் கண்ணை மயக்கும்
கண்டவுடன் காதலது ~ ஊடலுடன்
முடிந்துவிடும்
அழகில் மலர்ந்த காதலது ~ அந்தியுடன்
முடிந்து விடும்
உள்ளத்தில் மலர்ந்த காதலது
உயிருள்ள வரை
தொடர்ந்து வரும்...

# காதல்

புனிதமானதென்றான் காதல் மறைஞானி
இனிமையானதென்றான் காதல் புதுமைஞானி
வேதனையானதென்றான் காதல் அனுபவஞானி
சோதனையானதென்றான் காதல் அறியாஞானி
புனிதமும் இனிமையும்
சோதனையும் வேதனையும்
கலந்ததே காதல் என்றான் தத்துவஞானி
கா+தல் எனப் பிரிக்க
காதல் ஒரு பகுபதம் அல்ல ~ என்றும்
உள்ளத்தால் பிரியா பகாப்பதம்
நொடிப் பொழுதில் மறைய
காதல் மின்னல் அல்ல ~ என்றும்
மறையா வானம் போன்றது
காதல் வேறு
அன்பு வேறு ~ என்றான்
பழமைவாதி
அன்போடு கலந்த காதல்
உண்மையென்கின்றேன் யான்
புதுமை வாதி...
காதலர்க்கு கல்லறை கட்டி விடலாம் காதலுக்கல்ல
காதலர்க்கு அணைபோடலாம்
காதலுக்கல்ல



கோழையும் காதலால் வீரனாகலாம்
வீரனும் காதலால் கோழையாகலாம் காதல்
சாதி மதம் பார்ப்பதில்லை ~ அது
அணைகடந்த வெள்ளம் போல ~ எங்கும்
எவரிலும் பாய்ந்து செல்லும்
காதலரும் நண்பராகலாம்
விட்டுக் கொடுப்பால்
நண்பரும் காதலராகலாம் புரிந்துணர்வால்
"ஷாக்" அடித்தால்
"ஷாக்" தான் மருந்தாகும்
காதலுக்கு காதல் தான்
மருந்தாகும்.



# பெப்ரவரி – 14

மொட்டும்
மலரத் துடிக்கும் நாளது – பல
பட்டும்
பறக்க நினைக்கும் நாளது
சொட்டும்
பனிப்பூக்கள் உடன்
கொட்ட நினைக்கும் நாளது

வட்டநிலா
வளையம் போட – பல
மொட்டு நிலா
வளையல் போடும்
நட்ட நடு இராவிலும் – பல வர்ண
ஜாலம் போடும்

பாட்டும் வந்திடும் – பல
மெட்டுப் போட்டு
காட்டும் வந்திடும் – பல
*Heart* போட்டு
சூட்டும் வந்திடும் – பல
டிசைன் போட்டு
நோட்டும் முடிந்திட வாங்கும் – பல
சாட்டுப் போட்டு
வெட்டவெளி நிலவில்
தட்டம் தனியாக
காத்திருப்பாள் கன்னியவள்

ஆழ்மனதில்
ஓர் ஏக்கம்
விடியாதோ காலை
சீக்கிரமென
கண்ணனவன்
றோஜா செடி வளர்த்து
மலர் பறிக்க காத்திருப்பான்
காலை விடிந்ததும்
உதிர்ந்திடும் புன்னகை
விரைந்திடும்
அன்பு தேடி
பல சாட்டு ~ வீட்டில் கூறி


அந்தியதில் சந்திப்பு
அங்கே ஓர் பிரமிப்பு
கண்ணனவன்
கவி தொடுப்பான்
அழகென்ன றோஜா
உன் அழகை விஞ்ச ~ மலரில்லை
பிரபஞ்சத்தில்

கன்னியவள் மயங்கிடுவாள்
கண்ணனவன் தேன் மொழிகளில்
அமிர்தம் உண்ட தேனீ போல்
சஞ்சரிப்பார்
காதல் உலகில்
பூமியே அழகடா ~ இந்த

காதலால் ~ இந்த
காதலும் அழகடா ~ உண்மை
காதலர்களால்
எல்லா தினமும்
காதலர் தினமே காதலர்க்கு
பெப்ரவரி 14
காதல் ஞாபக தினமடா
மற்றவர்க்கு...



# கலைந்தது என் கனவு



நிலவே

தெரிந்தது உன் முகம்

நீரின் மேல்

வெண்ணிலவு போல்

உதிர்ந்தது ~ உன்

புன்னகைச் சிரிப்பு ~ அதில்

மறந்தது ~ என்

சிந்தனை நினைப்பு

நினைத்தேன் நொடியதில்

அள்ள உன்னை அப்படியே

அப்பொழுதுதான் கலைந்தது

என் கனவு...

# நீயும் பேதையே...

பெண்ணே...

பணம் பாராதே ~ ஆணின்

குணம் பார்

நிறம் பாராதே ~ ஆணின்

அறம் பார்

நடை பாராதே ~ ஆணின்

கொடை பார்

எடை பாராதே ~ ஆணின்

விடை பார்

மதம் பாராதே ~ ஆணின்

விதம் பார்

சாதி பாராதே ~ ஆணின்

சோதி பார்

கரம் பாராதே ~ ஆணின்

தரம் பார்

அமைந்தால் இத்தனையும்

நீ சீதை அன்றேல்

நீயும் பேதையே.

# நீ அறியாயோ

மலரே

உனக்கேன் பெருமிதம்

அழகுக்கு இலக்கணமே ~ நீ

தான் என

பல இதழ்கள்

சேர்ந்ததால் தான்

மலரானாய்

என்பதை ~ நீ

அறியாயோ...



# நினைத்ததில்லை

கேட்டதுண்டு

பட்ட மரமும் பூத்ததை

பார்த்ததுண்டு

பாலையும் சோலையானதை

படித்ததுண்டு

பாறையிலும் நீர் கசிவதென்று

அறிந்ததுண்டு

கல்லுக்குள்ளும் ஈரம் உள்ளதென்று

ஆனால்

நினைப்பதில்லை ~ உன்

இதயத்திலும் ~ ஈரம்

வற்றுமென்று.

# புது யுகம் படைப்போம்

பிறப்புண்டென்றால்
இறப்புண்டென்பது ~ உலக நியதி
அதுவே இடையில் வந்தால்
யார் நியதி!
படைப்புண்டென்றால்
அழிவுண்டென்பது ~ பிரம்மன் நியதி
அதுவே முடிவென்றால்
யார் நியதி
உறவுண்டென்றால்
பிரிவுண்டென்பது ~ பொதுவிதி
அதுவே நிரதரமென்றால்
யார் விதி!

காலமுண்டெனக் காத்திருந்த
குருத்தோலையும்
காலம் கனியாதோவென எதிர்பார்த்த
காவோலையும்
இவற்றிடையே
எட்டிப் பார்த்த குருத்துக்களும்
நொடிப்பொழுதில்
பிரியா விடை கூறாது

சென்றவனே!

அழைத்தும் வராதிருந்தான்

பிரம்மனவன்

அழையாமலே வந்திருந்தான்

எமனவன்



ஏன் இந்தக் கொடூரம்
இதுதான்
விடை காணாக் கேள்வி
மார்கழி இருபத்தாறு தனில்

நண்பா
இன்னுமா பிரம்மை
விடை காண எழுந்திரு
ஊர் இழந்தாய்
உறவிழந்தாய் ~ உணர்விழந்திடாதே
மண்ணிழந்தாய்
பொன்னிழந்தாய் ~ மனம் தளர்ந்திடாதே
சேய் இழந்தாய்
சேர்விழந்தாய் ~ சோர்வடைந்திடாதே
வேரிழந்தாய்
கொடியிழந்தாய் ~ பலமிழந்திடாதே
நம்பிக்கையே
உன் உயிர் மூச்சு
மீண்டும் எழுந்திரு
துயர் மறந்திடு
உன் சந்ததி வாழ
புது யுகம் படைப்போம்.

# இயற்கை உன்னை மாற்றும்

மனிதா...
திரும்பிப்பார் ஒருமுறை
உன் இல்லிடத்தை
படைப்பில் நீயே
சிகரம் என்றாய்
அதன் இறுமாப்போ என்னவோ
"மதிக்கவில்லை ஒன்றையும்"
அடக்க நினைத்தாய்
விண்வரை சென்று ~ ஆனால்
முடியவில்லை அடக்க ~ உன்வரை
வந்த சீற்றத்தை
சாதி என்றாய்
பேதமென்றாய்
அடைத்துக் கொண்டாய்
உன்னைச் சுற்றி வேலிதனை ~ ஆனால்
முடியவில்லை தடுக்க
அணைகடந்த சீற்றமதை
அயலவனில் வாழ்கின்றேன்
நான் என்றார் இயேசுபிரான் ~ நீயோ
அவனை அழித்து
கும்பிடச் சென்றாய் கோயிலுக்கு
புகட்டியது பாடம் ~ இயற்கையது
விடவில்லை கோயிலையும் ~ இனி
எங்கு செல்வாய் தஞ்சமடைய
மனிதா நீ மாறு ~ அன்றேல்
இயற்கை உன்னை மாற்றும்.

# நம்பிக்கை ஒளி

கிறிஸ்தவர்க்கு நம்பிக்கை ஒளி
கிறிஸ்துவே ~ நல்
இந்துவுக்கு நம்பிக்கை ஒளி
சிவனே
பௌத்தருக்கு நம்பிக்கை ஒளி
புத்தரே ~ நல்
முஸ்லிமுக்கு நம்பிக்கை ஒளி
நபியே

ஞானிக்கு நம்பிக்கை ஒளி
நிதானமே ~ நல்
விஞ்ஞானிக்கும் நம்பிக்கை ஒளி
அவதானமே
தேனிக்கு நம்பிக்கை ஒளி
தேடலே ~ நல்
யாழ்பாடிக்கு நம்பிக்கை ஒளி
தன் பாடலே

வீரனுக்கு நம்பிக்கை ஒளி
தன் வீரமே ~ நல்
விவேகிக்கு நம்பிக்கை ஒளி
தன் விவேகமே
துறவிக்கு நம்பிக்கை ஒளி
மறுவாழ்வே ~ நல்

துறவற்றவருக்கு நம்பிக்கை ஒளி
நல் வாழ்வே
வானோட்டிக்கு நம்பிக்கை ஒளி
திசை காட்டியே ~ நல்
படகோட்டிக்கு நம்பிக்கை ஒளி
விடிவெள்ளியே
உழவர்க்கு நம்பிக்கை ஒளி
மழையே ~ நல்
உழைப்பாளிக்கு நம்பிக்கை ஒளி
தன் முயற்சியே
பெற்றவர்க்கு நம்பிக்கை ஒளி
தம் பிள்ளையே ~ நல்
சுற்றவர்க்கு நம்பிக்கை ஒளி
தம் சுற்றமே
கற்றவர்க்கு நம்பிக்கை ஒளி
கல்வியே
மற்றவர்க்கு நம்பிக்கை ஒளி
செல்வமே
நண்பா
எது உனக்கு
நம்பிக்கை ஒளியென
கொஞ்சம் சிந்தியடா!!!

# ஆழ்கடல் முத்துக்கள்



க. அருள்ராஜ் அவர்கள் கொழும்பு மாவட்டத்தில் கிரான்பாஸ் எனும் ஊரில் 1976 இல் பிறந்தார். தனது சிறுபராயத்தில் அருட்திரு சவரிமுத்து அ.ம.தி. அவர்களின் பாதுகாப்பில் வளர்ந்த இவர் தனது ஆரம்பக்கல்வியை யாழ்ப்பாணம் முகமாலை றோ. க. பாடசாலையிலும் பின்னர் தனது தொடர் கல்வியை புனித பத்திரிசியார் கல்லூரியிலும் பயின்றார்.

கண்டியில் மெய்யியல் பட்டப்படிப்பை நிறைவு செய்த இவர், இடைப்பட்ட காலங்களில் British கல்லூரியிலும், Aquinas கல்லூரியிலும் ஆங்கில டிப்ளோமா, கணனி டிப்ளோமா, என்பவற்றை பயின்றுள்ளார். இவர் தமிழ் மொழியில் மிகவும் ஈடுபாடு கொண்ட இளம் கவிஞர் ஆவார். இவரின் கவிதைகள் கட்டுரைகள் இலங்கை தமிழ்பத்திரிகைகளில் வலம் வருகின்றன. ஆழ்கடல் முத்து கவிதை மலர் இவரின் முதல் வெளியீடாக அமைந்துள்ளது.

ISBN 978-955-50564-0-3

Design & Print by
Lanka Publishing House
0602137006-4933021